ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1893/31 - 2014 දෙසැම්බර් මස 17 වැනි බදාදා - 2014.12.17

*1893/31 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 17 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும்

எனது இலக்கம் : *01/10/03/04.*

***ஊவா மாகாண மாகாண சபை***

*ஊவா மாகாண ஆளுநரினால் செய்யப்பட்ட நியமனங்கள்*

*1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, மாகாண சபை சட்டத்தின் 32 (1) ஆம் பிரிவின் பிரகாரம் ஊவா மாகாண ஆளுநர் சீ. நந்த மெத்தியு ஆகிய எனக்கு வழங்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம் உடனடியாக செயற்படும் வகையில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நியமனங்கள் செய்யப்பட்டுள்ளன என்பதனை இத்தால் அறியத்தருகின்றேன்.*

1. இலங்கை நிர்வாக சேவையின் வகுப்பு I ஐச் சேர்ந்த உத்தியோகத்தர் திருமதி ஆர். எம். எஸ். டி. ரத்னாயக அவர்கள், ஊவா மாகாண சபையின் பிரதி தலைமைச் செயலாளராக (நிர்வாகம்).
2. இலங்கை நிர்வாக சேவையின் வகுப்பு III ஐச் சேர்ந்த உத்தியோகத்தர் திருமதி ஏ. ஏ. யு. சகுன்தலா அதிகாரி அவர்கள், ஊவா மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்புச் சேவை ஆணையாளராக.
3. இலங்கை பொறியியல் சேவையின் வகுப்பு I ஐச் சேர்ந்த உத்தியோகத்தர் திரு. ஏ. ஏ. பீ. எஸ். கே. கருணாரத்ன அவர்கள், ஊவா மாகாண கட்டடப் பணிப்பாளராக.
4. இலங்கை பொறியியல் சேவையின் வகுப்பு I ஐச் சேர்ந்த உத்தியோகத்தர் திரு. கே. ஏ. பீ. செனவிரத்ன அவர்கள், ஊவா மாகாண வீதிப் பணிப்பாளராக.
5. இலங்கை நிர்வாக சேவையின் வகுப்பு III ஐச் சேர்ந்த உத்தியோகத்தர் திருமதி ஜே. டபிள்யூ. சீ. எஸ். பிரியபாஷினி அவர்கள், ஊவா மாகாண சபையின் பிரதி தலைமைச் செயலாளர் (ஆளனி/பயிற்சி) பதவியின் பணிகளை முழு நேர பணியாற்றுவதற்கு.
6. இலங்கை கணக்காளர் சேவையின் வகுப்பு I ஐச் சேர்ந்த உத்தியோகத்தர் திரு. டபிள்யூ. எம். என். விக்ரமசிங்க அவர்கள், ஊவா மாகாண நிதி திணைக்களத்தின் பணிப்பாளராக (நிதி).
7. இலங்கை திட்டமிடல் சேவையின் வகுப்பு I ஐச் சேர்ந்த உத்தியோகத்தர் திரு. வீ. சீ. ஹெட்டியாரச்சி அவர்கள், ஊவா மாகாண நிதியும் திட்டமிடலும், சட்டமும் சமாதானமும், கல்வி, மாகாண உள்ளூராட்சி, காணி, கலாசாரம், சமூக நலன்புரி மற்றும் கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி மற்றும் நிர்மாணத்துறை தொடர்பான அமைச்சின் பணிப்பாளராக (திட்டமிடல்)

சீ. நந்த மெத்தியு,
ஊவா மாகாண ஆளுநர்.

ஊவா மாகாண ஆளுநரின் அலுவலகம்,
*2014, ஒற்றோபர் 10.*

*01 - 121/1*

எனது இலக்கம் : 01/10/03/04.

**ஊவா மாகாண மாகாண சபை**

ஊவா மாகாண ஆளுநரினால் செய்யப்பட்ட நியமனங்கள்

1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, மாகாண சபை சட்டத்தின் 32 (1) ஆம் பிரிவின் பிரகாரம் ஊவா மாகாண ஆளுநர் சீ. நந்த மெத்தியு ஆகிய எனக்கு வழங்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம் உடனடியாக செயற்படும் வகையில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நியமனங்களை செய்துள்ளேன் என்பதனை இத்தால் அறியத்தருகின்றேன்.

1. இலங்கை திட்டமிடல் சேவையின் வகுப்பு I ஐச் சேர்ந்த உத்தியோகத்தர் திரு. எம். எம். ஆனந்த விஜித குமார அவர்கள், ஊவா மாகாண சபையின் பிரதி தலைமைச் செயலளாராக (திட்டமிடல்),
2. இலங்கை நிர்வாக சேவையின் வகுப்பு III ஐச் சேர்ந்த உத்தியோகத்தர் திரு. ஜே. ஏ. எஸ். பீ. ஜயசிங்க அவர்கள், ஊவா மாகாண சபையின் கூட்டுறவு சேவையின் ஆணையகத்தின் செயலாளராக.
3. இலங்கை நிர்வாக சேவையின் வகுப்பு III ஐச் சேர்ந்த உத்தியோகத்தர் திரு. டபிள்யூ. டி. பீ. சீ. சமரசேகர அவர்கள், ஊவா மாகாண காணி ஆணையாளர் பதவியின் பணிகளை முழு நேர பணி ஆற்றுவதற்கு.
4. இலங்கை நிர்வாக சேவையின் வகுப்பு III ஐச் சேர்ந்த உத்தியோகத்தர் திருமதி சீ. ஏ. ஹேரத் அவர்கள், ஊவா மாகாண சமூக சேவைகள் பணிப்பாளராக.
5. இலங்கை நிர்வாக சேவையின் வகுப்பு III ஐச் சேர்ந்த உத்தியோகத்தர் திரு. ஜே. ஏ. எஸ். பீ. ஜயசிங்க அவர்கள், தனது நிரந்தரப் பதவிக்கு மேலதிகமாக, ஹப்புத்தளை நகர சபையின் செயலாளராக பதிற் கடமையாற்றுவதற்கு.
6. இலங்கை நிர்வாக சேவையின் வகுப்பு III ஐச் சேர்ந்த உத்தியோகத்தர் திருமதி டி. எம். வினிதா திசாநாயக்க அவர்கள், ஊவா மாகாண சபையின் நிதியும் திட்டமிடலும், சட்டமும் சமாதானமும், கல்வி, மாகாண உள்ளூராட்சி, காணி, கலாசாரம், சமூக நலன்புரி மற்றும் கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி மற்றும் நிர்மாணத்துறை தொடர்பான அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளராக முழு நேர பதிற்கடமை ஆற்றுவதற்கு.

சீ. நந்த மெத்தியு,
ஊவா மாகாண ஆளுநர்.

ஊவா மாகாண ஆளுநரின் அலுவலகம்,
2014, ஒற்றோபர் 17.

01 - 121/2

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.